# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 03 07–02–1992 ( பெப். 07 — பெப். 21 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### தொடர்பு அலுவலகம்

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் கொழும்பு தொடர்பு அலுவலகம் தைப்பொங்கல் தினத்தன்று பம்பலப்பிட்டியில், 14/14 A1 டுப்பிளிக்கேசன் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதரக செயலர் கலந்துகொண்டார்.

கத்தோலிக்க தனித்துவத்தைப் பேணும்படி அரசியல் சமூக தலைவர்களுக்கு அறைகூவல்

# கத்தோலிக்கரே! பிறமத வழிபாடுகளில் பங்குகொள்ளாதீர்

# பிறசமயத்தவர்களுக்கு கத்தோலிக்க வழிபாடு வழங்காதீர்

**இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் பெயரால் அதன் தலைவரும், கொழும்பு மறைமாவட்ட பேராயருமான பேரருள்திரு நீக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் சென்ற வாரம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

கடந்த காலத்திலும், குறிப்பாக அண்மைக் காலங்களிலும் அரசியல், சமூகத் தலைவர்கள் கத்தோலிக்க மதச் சடங்குகளில் பங்கு கொள்ளும் விதம் பல கத்தோலிக்கரின் மனதைப் புண்படுத்தியுள்ளதால் அது பற்றி இலங்கை ஆயர் மன்றத்தின் பெயரால் பேராயர் அவர்கள் சென்ற வாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்,

கத்தோலிக்கர், பிற சமய வழிபாட்டுத் தலங்களில் மலர், தூபம் சாத்தி, அடையாளங்களை இடுவது அனுமதிக்கப்படமாட்டாதெனவும், பிற மதத்தவர்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுப்பதும் கத்தோலிக்க சடங்குகளைச் செய்வதும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும். கத்தோலிக்கரும் அரசியல் நோக்கங்களுக்கு கத்தோலிக்க மத வழிபாடுகளைப் பயன்படுத்துவதும், விலக்கிக்கொள்ளப்படவேண்டும் என்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. முழு அறிக்கையும் அடுத்த இதழில் வெளிவரும்.

## பெண் இறையியலாளரின் எழுச்சி

இந்தியாவின் பெண் இறையியலாளர், ஹைதராபாத்தில் கடந்த நவம்பர் மாதம் ஒன்று கூடியபோது ஆண் ஆதிக்க இறையியலை மாற்றியமைத்து மானிடத்தன்மை கொண்ட சமுதாயத்தை ஏற்படுத்துவதில் பற்றுறுதி கொள்வதெனத் தீர்மானித்தனர்

நாட்டின் பல்வேறு மாதர் இயக்கங்களின் பிரதிநிதிகளான இவர்கள் இறையியல் வல்லுநரான பெண் துறவிகள். பெண்களிடத்தில் உயிரோட்டமுள்ள ஆன்மீகத்தை விருத்தி செய்ய விரும்பிய ஒரு குழுவினரால் இது 1986இல் ஆரம்பிக்கப்பட்டது.

''இறையியல் கருத்துகளுக்கு ஆண்கள் அளிக்கும் விளக்கம் முழுமையானதல்ல அதை முழுமையாக்கவேண்டும் பெண் ஆன்மீகம் இறைவாக்கு இயல்புடையது. அதற்கு ஒரு பணி உண்டு' என கருத்தரங்கில் பங்கு பற்றிய அருட்செல்வி வின்சன்ற் கூறினார்.

## தொண்டராகத் திரும்பிவந்த உல்லாசப்பயணி

1990 இல் ஓர் உல்லாசப் பயணியாக இந்தியாவுக்கு வந்த மார்க்கஸ் ஹேய்ட் என்னும் ஜேர்மன் இளைஞர் மீண்டும் இந்திய கிராமங்களைத் தரிசிக்க வந்துள்ளார். பிதா மைக்கல் விண்டி என்பவரது தலைமையில் இயங்கும் ''கிராமப் புனர்நிர்மாண அமைப்பு'' பூர்வ குடியினருக்காக அமைத்து வரும் கிராமங்களையே அவர் பெரும்பாலும் தரிசித்து துணை புரிந்து வருகிறார். ஆந்திர பிரதேசத்தில் இது போன்ற மூன்று கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்காவது கிராமத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது ஹேய்டின் சொந்த ஊரான கெல்கீம் என்னும் நகரிலுள்ள 100 பேரே இத்திட்டத்திற்கான நிதியுதவியை அளித்து வருகின்றனர்.

இத்தகைய பணிக்கு அவரைத் தூண்டியது என்ன எனக் கேட்கப்பட்டபோது கிராம மக்கள் வாழ வகைதேடி நகர்ப்புறங்களுக்கு மிகுதியாக செல்கின்றனர். இதை ஓரளவு தடுப்பதே தமது நோக்கம் என்று சொன்னார்.

கெல்கீம் போலவே வேறு சில ஜேர்மன் நகரங்களும் வேறு மாநிலங்களில் கிராமப் புனரமைப்புக்கு நிதியுதவி செய்து வருகின்றன.

## உறுதிப்படுத்தும் பேரணிகள்

பாகிஸ்தானில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ மக்கள், பேர் பெற்ற போதகர்கள் இறைவார்த்தையைப் போதிப்பதைக் கேட்பதற்காக தொலை கிராமங்களிலிருந்து திரண்டு வந்தனர்.

இத்தகைய நிகழ்ச்சிகள் பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் நடத்தப்படுகின்றன. முஸ்லீம்கள் மத்தியில் மிகச் சிறுபான்மையினராக வாழும் கிறிஸ்தவருக்கு இப்பெருங் கூட்டங்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் தமது சகோதரரின் ஆதரவைப் பெற்று உறுதிப்படும் படியாகவே இந்த போதக, செப பேரணிகள் நடத்தப்படுகின்றன. பைசலாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருப்பலியும் குணமாக்கும் திருச்சடங்கும் இடம்பெற்றன. பிரான்ஸிஸபாத்தில், மாதாவின் வணக்க வழிபாடும் புனித பிரான்ஸிஸ் அசிசியார் திருநாளும் நடைபெற்றன.

## ஏழையின் பெருந்தன்மையால் உருவான மலர்க்கிராமம்

கொரியாவில் ஓர் ஏழையின் பெருந்தன்மை காரணமாக இயலாதோரை ஆதரிக்கும் ஒரு கிராமமே உருவாகியுள்ளது. 15 ஆண்டுகளுக்குமுன் பிதா ஜோண் ஓ என்னும் இளங்குருவானவர், பனியில் கஷ்டப்பட்டு நடந்து சென்ற ஓர் ஏழையைக் கண்டார். அவனைப் பின்தொடர்ந்து அவனது குடிசைக்குச் சென்றபோது அவருக்குப் பெரும் திகைப்பு ஏற்பட்டது. ஏனெனில் தான் பிச்சையெடுத்த உணவைக்கொண்டு சோய் டொங் என்னும் அந்த ஏழை 18 நோயாளர், வயோதிகரைப் பராமரித்துவந்தான். பிதா ஓ இடத்தில் இது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. மறுநாளே அவர் துன்புற்றோரை ஆதரிக்கும் ஓர் இல்லத்தை கட்டத்தொடங்கினார். 1980இல் மறைமாவட்டம் இப்பணியை விஸ்தரிக்கத் தீர்மானித்தது.

அதன் பயனாக உருப்பெற்ற மலர்க்கிராமம் இன்று ஓர் வைத்தியசாலை, மனநோய் வைத்தியசாலை, காசநோயாளர் இல்லம் ஆகியவற்றுடன் வயோதிபர் இயலாதோரை ஆதரிக்கும் வசதிகளையும் கொண்டு விளங்குகிறது சுமார் 370,000 பேர் இதற்குக் கிரமமாக நிதியுதவி புரிந்துவருகிறார்கள். பிச்சையெடுத்து வாழும் அங்கவீனன் ஒருவன் பணத்திலிருந்து மலர்க்கிராமத்துக்கு அன்பளிப்புச் செய்வதுடன் தனது கண்களையும், சிறுநீரகங்களையும் தானம் செய்ய முன்வந்துள்ளான்.

கிராமவாசிகளும் இவர்களது அன்பை உணர்ந்து தமது கண்களைத் தானம் செய்துள்ளனர். சென்ற ஆண்டு சோய் இறந்தபோது அவனது கண்கள் 28 வயதான ஒருவருக்குப் பார்வையளித்தன.

## கிறிஸ்து அனுபவத்தை வெளிப்படுத்தும் நாவல்

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த குருவானவர் ஒருவர் கிறிஸ்துவுடனான மானிட அனுபவத்தை நாவல் வடிவில் வெளியிட்டிருக்கிறார். விஸ்வ ஜோதி என்னும் இந்நாவல் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. இதன் ஆசிரியரான பிதா கியூர்ஷியஸ் ராஜா ஹைதராபாத் குருமடமொன்றில் கடந்த நான்கு ஆண்டுகளாக இறையியல் கற்பித்து வருகிறார்.

259 பக்கங்களைக் கொண்ட இந்நாவல் இன்றைய சூழலில் எமது மக்களுக்காக எழுதப்படும் நற்செய்தி என அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். 'வரலாற்று நற்செய்திகள் மாதிரிகளே. இன்று நாம் எழுதுவதேசரியான நற்செய்தி. ஆண்டுதோறும், கிறிஸ்துவை அனுபவித்தவர்களால் புது நற்செய்திகள் எழுதப்படவேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

## கத்தோலிக்க கருத்தரங்கு

கேரளத்தின் அகில இந்திய பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் நடத்திய கருத்தரங்கொன்றில் திருச்சபை தனது சமுதாய போதனைகளை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது என்று கூறியது.

''முதலும் தொழிலும்'' என்ற பாப்பு 13ஆம் சிங்கராயரின் சுற்றுமடலின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாகவே இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த திருச்சூர் ஆயர் ஜோசவ் குண்டுகுலம் ''எம்மைச் சூழவுள்ள அநீதிகளுக்காக பிறரைக் குற்றஞ் சாட்டாமல் எமது காரியங்களில் நீதி நேர்மையுடன் நடந்து கொள்ள முயல்வோமாக'' என்று கூறினார்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

### தனித்துவத்தைப் பேணல்

கத்தோலிக்கர் பிற மத வழிபாடுகளில் பங்கு கொள்வது, பிற மதத்தவர்கள் கத்தோலிக்க வழிபாடுகளை நடத்தி அரசியல் லாபம் தேட முற்படுவது போன்ற தவறான நடைமுறைகளுக்கு எதிராக இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் பெயரால் கொழும்பு மறைமாவட்ட பேராயரும், ஆயர் மன்றத் தலைவருமாகிய பேரருள்திரு நீக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்கள்.

சமூக, அரசியல் தலைவர்களுக்கே முக்கியமாக பேராயர் குறிப்பிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை இலங்கை வாழ் கத்தோலிக்கர் அனைவருக்குமே ஒரு மகிழ்ச்சிதரும் செய்தியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கத்தோலிக்க அரசியல் தலைவர்களும், சமூக அந்தஸ்துகளில் தலைமை வகிப்போரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிற மத வழிபாடுகளில் பங்குபற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை விளக்குமுகமாகவே கத்தோலிக்க ஆயர்சங்கம் அறிக்கையை விடுத்துள்ளது.

கத்தோலிக்கர், இஸ்லாமிய மத அரசியல் தலைவர்களின் கட்டுக்கோப்பான நடைமுறைகளை முன் மாதிரிகையாகக்கொண்டு ஒழுக வேண்டும்.

பிறமத வழிபாட்டு இடங்களில் மலர்சாத்துவது, தூபமிடுவது, பிறமத அடையாளங்களை இடுவது கத்தோலிக்கருக்கு அனுமதிக்கப்படமாட்டாது என்றும், இத்தகைய பிறமத வழிபாடுகளில் பங்கு கொள்ளவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகும் சமூக அரசியல் தலைவர்கள், அவ்வழிபாடுகளில் பங்காளிகளாக மாறாமல், எல்லா மதங்களுக்குமே கொடுக்கப்படவேண்டிய மரியாதையைக் கொடுத்து பார்வையாளர்களாக அவற்றிற்கு சமுகம் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகள் தலைவர்களுக்கு மட்டுமன்றி சாதாரண கத்தோலிக்கருக்கும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவதுண்டு. அவர்களும் தலைவர்களினதும் அதிகாரிகளினதும் மதிப்பைப்பெற மதத்தை விலைபேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

அரசியல் சமூக நோக்கங்களுக்காக கத்தோலிக்க மத வழிபாடுகளைப் பயன்படுத்தும் நடைமுறைகளையும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் சுட்டிக்காட்டி அவற்றை விலக்கிக் கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளது.

கத்தோலிக்க அரசியல்வாதிகளும், மற்ற கத்தோலிக்கரைப்போல தமது கருத்துக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கக் கோர உரிமை உடையவர்கள். ஆனால் அரசியல்நோக்கங்களுக்காக இவை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் வேதாகம செப வழிபாடுகள் அல்லது ஆசீர்வதிக்கும் சடங்கு போன்றவற்றை நிகழ்த்துவதே சிறந்தது. இதன் மூலம் கிறிஸ்தவ சமூகத்துக்குரிய சிறப்பான வழிபாடாகிய திருப்பலியை துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறமதத்தைச் சார்ந்த சமூக, அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக கத்தோலிக்க வழிபாடுகளை பெற்றுக்கொள்ள முடியாது என்றும், அவர்கள் பிரத்தியேகமான முறையில் ஆசீரையோ செபத்தையோ குருவிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஆயர் மன்றம் கூறுகிறது. எனவே பிறமதத்தைச் சார்ந்த தலைவர்களுக்காக வழிபாடுகளை நடத்துவதை கத்தோலிக்க தலைமைப்பீடம் முற்றாகத் தடைசெய்துள்ளது கண்கூடு.

# கேரள கம்யூனிஸ்டுகள் நாட்டின் சமூக நிலையை உணரவில்லை

அப்போது எனக்கு எட்டு வயது. வீதியில் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்த மனிதனைப்பார்த்து, அவன் ஒரு கம்யூனிஸ்ட், ஒரு பாவி என்று என் தந்தை எனக்குக்கூறினார். நாம் ஞாயிறு பூசைக்கு சென்று கொண்டிருந்தோம். ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள் என்னைத் துன்புறுத்தின. ஏனென்றால் நான் பாவத்துக்கு அஞ்சினேன்.

எனது தந்தையோ புனித தோமையார் காலத்திலிருந்து 2000 ஆண்டு காலமாக வந்த கிறிஸ்தவ ஆன்மிகத்தைக் கொண்டு பெருமையடைபவர். அம்மனிதனைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் தீய ஆவிகளைத் தடுக்க எனது தந்தை சொல்லித்தந்திருந்த செபங்களைச் சொல்லிவருவேன்—அதாவது எனக்கு விடயம் விளங்கும் வரை.

அந்தக் கோஷங்களெல்லாம் உணவு கிடைக்காத வகுப்பினரின் நம்பிக்கை என்பது எனக்கு அப்போது தெரியாது.

சில ஆண்டுகளுக்குப்பின் உணவு இலவசவில் பெறக்கூடியதல்ல என்றும். அதற்காக கோஷங்கள் எழுப்புவது இயல்பானதுதான் என்றும் உணரலானேன்.

1970 களில் தெற்கு கேரளத்திலுள்ள மூக்கனூர் என்னும் எமது கிராமத்திற்கு அயலிலுள்ள ஒரு நகரிலிருந்து தோழர்கள் வந்து கம்யூனிஸ்ட் தத்துவம்பற்றி வகுப்புகள் நடத்தியபோது ஊர்முழுவதும் அக்கொள்கையில் ஊறிப் போயிற்று.

அவர்கள் பிரசுரங்களை விநியோகித்தனர். தொழிலாளருக்கு சங்கம் அமைத்தனர். காலங்காலமாக இருந்துவந்த தளைகள் சமய அடிமைத்தனங்களிலிருந்து விடுபடுமாறு அத்தலைவர்கள் அறிவுரை கூறினர். கற்பனை வளமுள்ள எமது கண்களின்முன் கம்யூனிஸத்தைப்பற்றி அழகிய காட்சிகளை — சமத்துவம், உழைப்புக்கேற்ற ஊதியம், நீதி, அனைவருக்கும் நல்வாழ்வு — தீட்டினர்.

இந்தப் புதிய அறிவு எளிய கிராமிய மக்களாகிய எமக்குக் கிளர்ச்சியூட்டின. எங்களுட் சிலர் 2000 ஆண்டு கிறிஸ்தவ விசுவாசம் கற்பித்ததைவிட சிறந்த வாழ்க்கை வாழக்கூட கம்யூனிஸத்திலிருந்து கற்றுக் கொண்டனர்.

''காலப்போக்கில் நிலைமை மாறும் மாற்றத்தைத் தவிர்க்க முடியாது'' என எமது புதிய தலைவர்கள் எம்மை நம்பவைத்தனர். கம்யூனிஸம் மக்களை நன்முறையில் உருவாக்கிய சோவியத் நாடு, கியூபா, ருமேனியா போன்ற நாடுகளின் ''வெற்றி வரலாறுகளை'' எடுத்துக் கூறினர். நாமும் சோவியத் யூனியன்தான் உலகில் மோட்சம் என்று நம்பினோம். எமது நாடும் பாலும் தேனும் ஓடும் நாடாகும் என்று கனவு கண்டோம்.

எமக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1957 இல் உலகிலேயே முதல் முறையாக சன நாயக முறையில் ஒரு கம்யூனிஸ்ட் அரசை தெரிவு செய்து வரலாறு படைத்தோம். அதன் பின் எமது கட்சி பல முறை மாநிலத்தை ஆட்சி செய்தது எமது நம்பிக்கையும் வளர்ந்தது.

ஆனால் கம்யூனிஸ்டுகள் நாட்டைப் புதுப்பிக்கும் மெசியாக்கள் அல்ல, எமது நாட்டை பொருளாதாரரீதியிலும், ஒழுக்கரீதியிலும் வலுக்கெடுக்கும் அதிகாரத் தரகர் கூட்டம் என்பதை நாம் விரைவில் உணரலானோம். எமது மருட்சி நீங்கியது ஆனால் எமது மனம் புண்பட்டது

கேரளத்தில் 1940 களிலும் 1950 களிலும் தொழிலாளர்களும், அறிவாளர்களும் கம்யூனிஸத்தால் கவரப்பட்டனர். பின்பு அறிவாளிகள் கட்சியிலிரு து விலக, இயக்கம் தனது சிந்தனையாளர்களை இழந்தது கருத்தியல் சச்சரவுகளினாலும், தலைவர்களிடையில் தன்முனைப்புப் போராட்டத்தினாலும் அது இன்னும் சீர் கெட்டது.

எமது இயக்கம் கொள்கையிலுள்ள பிழைகளினாலல்ல, அதை நடை முறைப்படுத்தியோரின் குறுகிய நோக்கினால் மறைந்தொழிந்தது என்பதை நாம் பின்னோக்கிப் பார்க்கையில் வருத்தத்துடன் உணர்ந்தோம்.

இந்நாட்டு மண்ணின் நிலைமையை அலட்சியம் செய்ததுதான் இந்தியக் கம்யூனிஸ்டுகள் செய்த மாபெரும் தவறாகும். இந்தியா தனது சமய மதிப்பீடுகளை விடாது பற்றிக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

மூடநம்பிக்கைகள் பரவலாகக் காணப்படுகின்றன. மாந்திரீகமும் நடைமுறையில் உண்டு தெய்வங்களைச் சாந்தி செய்ய குழந்தைகள் பலியிடப்படுகின்றனர்.

இந்தியர்கள் தமது தெய்வங்கள், சமயம், பழமைப் பற்றுகளிலிருந்து விடுபட இன்னும் நீண்டகாலம் செல்லும் என்பதை எமது தோழர்கள் உணரவில்லை.

கடந்த ஜூன் மாதம் நடந்த தேர்தல்கள் இதை நிரூபித்து விட்டன.

கேரளத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் தோற்றதற்குக் காரணம் அவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளைக் கட்டுப்படுத்த முயன்றமையே. புனித தோமையாரின் வழிவந்தோர் இச்செயலானது கிறிஸ்தவர்களின் தொண்டையை நெரிக்கும் என்பதை உணர்ந்தனர். இம்மாநிலத்தில் வாழும் 29.1 மில்லியன் மக்களுள் கிறிஸ்தவர் 20வீதத்துக்கு மேற்பட்டவராவர்

மீண்டுமொருமுறை எமது கனவுகளை உருவாக்க கம்யூனிஸ்டுகளுக்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. இருபது ஆண்டுகளுக்கு முன் எனது தந்தை கூறியது சரிதானோ என நான் இன்று எண்ணிப் பார்க்கிறேன். இந்த எண்ணம் என்னைப் பாவத்தைக்கண்டு அஞ்சும்படி செய்யவில்லை. ஆனால் அவநம்பிக்கையை உண்டாக்குகிறது.

(ஜீமன் ஜேக்கப் கேரளத்திலுள்ள ஓர் கத்தோலிக்க பத்திரிகை எழுத்தாளர்)

## 'மாணவர் கடமை'

இளமையிற் கல்விதனைக் கற்க வேண்டும்
எளிமையாய் வாழவே பழக வேண்டும்
உளமதில் உண்மையைக் கொள்ள வேண்டும்
உரிமைக்குக் குரல்கொடுக்க எண்ண வேண்டும்.

களமதில் கடமையே கண்ணாக வேண்டும்
கண்ணியம் கட்டுப்பாடு உண்டாக்க வேண்டும்
வளமான எண்ணங்களைக் கொள்ள வேண்டும்
வாழிய செந்தமிழ் என்று சொல்ல வேண்டும்.

வள்ளுவன் சொன்னவழி நடக்க வேண்டும்
வரைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும்
பள்ளுதமிழ் பாரதியைப் படிக்க வேண்டும்
பாவேந்தன் கவிதைகளைக் கற்க வேண்டும்

துள்ளுநடை இளங்கோவைக் காணவேண்டும்
தூய சிலப்பதி காரத்தை அணிய வேண்டும்
தெள்ளுதமிழ் கம்பனையும் அறிய வேண்டும்
தேம்பா வணியையும் உணர வேண்டும்.

காந்தி மகான் சொன்னவழி நடக்க வேண்டும்
கனிவான மொழி பேசப்பழக வேண்டும்
காந்தி வழி—தர்மம் எனத்தெரிய வேண்டும்
சன்மார்க்க உயர்நெறி யறிய வேண்டும்

நீந்தி வரும் அன்னத்தின் தூய்மை வேண்டும்
நீசருக்கு அன்பையே அருள வேண்டும்
ஏந்தி புகழ் தோய்ந்து ஒளிர வேண்டும்
ஈன்றவர்க்குத் தம் உள்ளமே குளிர வேண்டும்.

ப. ஞானராஜ்,
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# நிர்ப்பந்தமான நிலைமை

## சிறுகதை

ஐந்து மணி என்பதை அறிவித்து ஓய்ந்து கொண்டது எமது யாகப்பர் கோவில் மணி. மணிக்கூட்டின் அலாரம் ஐந்து முறை அடித்து முடியும் முன்னரே கோவில் மணியும் கேட்கத் தொடங்கிவிட்டது. அவ்வளவு தூரம் சரியான நேரத்தைக் கணிப்பிட்டு மணி அடிப்பதில் நீக்கிலா அப்புவுக்கு நிகர் அவர் தான்.

நித்திரைப் பாயில் படுத்திருந்த எனக்கு சத்தம் தெளிவாகக் கேட்டது. விலத்திக் கிடந்த போர்வையை எடுத்து மூடிக் கொண்டு கண்ணை மீண்டும் மூடிக் கொண்டேன். விடிந்துவிட்டபின்பும் வில்லங்கத்திற்குக் கண்ணை மூடி மாறி மாறிக்கிடந்து நித்திரை கொள்ள முயற்சித்தும் தோல்வி கண்டேன். கண்கள் லேசாக எரிந்தன. வீட்டில் ஒரு சிலர் நித்திரையை முடித்துக் கொண்டு கொட்டாவி விடுவது எனக்கு கேட்டது. ஆனால் எனக்கோ இன்னும் நித்திரை வரவில்லை. சின்ன வயசில் என்னை எல்லாரும் நித்திரைச் சாமி என்று தான் சொல்லுவார்கள். ஆனால் இப்ப அதைத் தொலைத்துப் பல நாட்களாகி விட்டது.

ஏன் எனக்கு நித்திரை வாறேல்லை என்று பலரிட்டை பல தடவை காரணம் கேட்டன். அலெக்ஸ் சொன்னான்.

“இந்த ஆமிக்காரங்களின்ரை பிரச்சனையளுக்குப் பயந்துதான் உனக்கு நித்திரை வாறேல்லை.”

ஆனால் அதுக்கு பயந்திருந்தால் மற்றவங்களைப்போல எப்பவோ நான் கொழும்புக்குப் போயிருப்பன்.

ஸ்ரிபனோ “உது ஒரு புது வியாதி மச்சான், பேப்பரிலை வந்தது”, பேப்பரில் படித்தது எனக்கும் நினைவுக்கு வந்தது.

செல்வம் “டேய்மச்சான்! எங்களுக்குக் கூட நித்திரை வாறேல்ல” அன்று பகிடி விட்டான்.

“உந்த வயதுக்கு நித்திரை வராது அலைக்கழிக்கும்” என்றது ஒரு பழசு, எனக்குச் சிரிப்பாக இருந்தது.

இப்படித்தான் எல்லாரும் தங்கடை அறிவுக்கு எட்டின மாதிரி, காரணத்தை சொல்லிச்சினம். இதிலை எதுவுமே எனக்கு சரியாகத் தெரியேல்லை. இறுதியாக நானே என்னிடம் காரணம் கேட்டபோது தான் புரிந்து கொண்டேன்.

படிச்சு முடிஞ்சு எத்தினை நாளைக்குத்தான் இப்படி வீட்டுக்கு பாரமா இருக்கிறது? ஏதாவது வேலை செய்யலாமெண்டால் வெளியிலை போக ஏலாத நிலைமை. எங்கடை தப்பான சமூக அமைப்பு முறையாலை ஆணாப் பிறந்தவனுக்கு குடும்பத்திலை இருக்கிற பொறுப்புகள், வீட்டு நிலைமைகள் இது எல்லாவற்றையும் தீர்க்க வழிதேட வேண்டிய வேளையில் வீட்டுக்குள் குமர்ப்பிள்ளை போல குந்தி இருக்க வேண்டிய நிலைமை. வீட்டுக்கு வெளியிலை போய்த்தான் உழைக்கலாமெண்டால் நாட்டுப் பிரச்சனை. இது எல்லாவற்றிற்கும் முடிவு கட்டிவிட்டு, நாட்டுக்கு வெளியிலை போய் விடலாமெண்டால் வீட்டுப் பிரச்சனை.

எங்களோடை படிச்சு விளையாடி, ஒன்றாய்த் திரிஞ்ச பயஸ், டெனி, சாள்ஸ் இவங்களைப்போல வெளி நாட்டுக்கு போறது எனக்கும் நல்ல விருப்பம். அங்கை போனால் இந்த நாட்டுப் பிரச்சனைகளிலிருந்து தப்புவது மட்டுமில்லை, பொறுப்பு என்ற பிரச்சனைகளையும் தீர்க்கலாம். ஆனால் காசுப் பிரச்சனை, கடன் வாங்கிப் போகலாம், ஏமாந்து போனால்...இதுதான் என்ரை பிரச்சனை இத்தனைக்குப் பிறகும் நித்திரை என்பதை எப்படி என்னாலை நினைக்க முடியும்.

எது எப்படி இருந்தும் என்ரை இறுதி முடிவு, வெளிநாடு போவதுதான். எப்படிப் போவது எண்டுதான் எனக்குத் தெரியேல்லை. இந்த பிரச்சனை எனக்கு மட்டுமில்லை. என்னோடை தனிச்சு நிக்கிற அலெக்சுக்கும்தான். பயசும் டெனியும், சாள்சும் வெளிநாடு சென்ற அந்த ஒரு வருடமா எனக்கு அலெக்ஸ் துணை, அவனுக்கு நான் துணை. எங்களுக்குள்ளே வேரூன்றி இருந்த நட்பின் ஆழத்தை அளவிட முடியாது. அவ்வளவு தூரம் எங்கள் ஐவருக்குள்ளும் ஒரு வித அன்னியோன்னியம். நாம் நட்பு என்பதற்கு வரைவிலக்கணம் வகுத்துக்கொண்டபோது, ஏற்பட்ட பிரிவை விதி என்னும் சொல்லினுள் அடக்கி விட்டோம்.

இறந்த காலத்தின் இனிமையான நினைவுகள் அவ்வப்போது வந்து ஆட்கொள்ளும் போது சொல்லத் தெரியாத ஒரு சோகம் பீடித்துக்கொள்கிறது. கடந்தகால சல்லூரி வாழ்க்கையில் நெஞ்சிலே மிஞ்சிவிட்ட சம்பவங்கள், என் தனிமை நிலையிலே வந்து மனதை வருத்திவிட்டுச் செல்வதுண்டு. தியேட்டரிலை படம் பார்க்க வீட்டுக்குத் தெரியாமல் ரவுணுக்கு போனது, கள்ளக் கோழி பிடித்துக் காய்ச்சித் தின்றது, பள்ளிக்கூட வளவில் சந்திரனுக்கு தெரியாமல் பிலாக்காய் அறுத்தது, ரியூட்டறிப் பெட்டையளுக்கு பகிடி விட்டு பல்லுக் காட்டியது, இடை இடையே கீரிமலைக்கு சைக்கிளில்சென்று முழுகி விட்டு வரும் வழியில் கூவில் பனை அடைப்பொன்றில் சென்றி போட்டு கள்ளடித்த காலம் எம் மனதிலே என்றும் பசுமையான நினைவுகளாய்ப் பதிந்து விட்டன.

எமது நட்பின் ஆழத்தைப் புதுப்பித்துக்கொள்ள அவ்வப்போது எனக்கு பயஸ் எழுதும் கடிதங்களில் எல்லாம் கடந்த காலத்தின் மீதும் ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்தாமல் அவன் முடிப்பதில்லை. ‘வெளிநாட்டு வாழ்க்கை’ எங்கடை கடந்தகால வாழ்க்கையின் நூறில் ஒரு பங்கு கூட இல்லை; என்று ஒரு முறை எழுதியபோது கண்ணீர்த்துளியொன்று கடிதத்தை நினைத்துவிட்டது. “இஞ்சை நல்லா உழைக்கலாம். ஆனால் வாழமுடியாது உங்கை வாழலாம். ஆனால் உழைக்க முடியாது. இஞ்சை உழைத்துக் கொண்டு கட்டாயம் உங்கை வருவன் மீண்டும் வாழுவதற்காக. குறிப்பா சொல்லப் போனால் இது ஒரு இயந்திர வாழ்க்கை.”

இவைகளைத்தான் அடிக்கடி அவன் கடிதத்தில் காண்பேன்.

மணி இப்போது எட்டைக் கடந்து விட்டது. பாண் வாங்கக் கடைக்குச் செல்ல ஆயத்தமானபோது மணிச்சத்தம். இடையிடையே எமது வீட்டுக்குப் பழக்கமான மணி. எட்டிப் பார்க்கிறேன். தபால்கார கந்தசாமி கையில் ஒரு வெளிநாட்டுக் கடிதத்துடன் “தம்பி உனக்குத்தான்” என்றவாறு துப்பல் பறக்க சிரிக்கிறார். அவசர அவசரமாகஓடிச்சென்று பதட்டத்துடன் வாங்கிப் பார்க்கிறேன். குட்டி குட்டி எழுத்துக்கள். புரிந்துவிட்டது. மனதில் ஒருவித மகிழ்ச்சி. எமது நட்பை புதுப்பிக்கும் நான்காவது கடிதம். பிரித்துப் படிக்கிறேன். வழமையான நல விசாரிப்புகளுடன் பழைய பல்லவிதான். நாட்டுப்பிரச்சனை முடிந்தவுடன் மீண்டும் வருவேன் என்றும் எழுதியிருந்தது. அவன் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் அந்த வாழ்க்கையில் ஒருவித வெறுப்பை வெளிப்படுத்தி நின்றாலும் எனது நிலைமை அதை மறைத்து நின்றது. எப்படியும் நான் வெளிநாடு போவது முடிந்த முடிவு.

(யாவும் கற்பனையல்ல)

எழுதியவர்:-
அருள் கலைவேந்தன்
யோண் பொஸ்கோ கழகம்
இளவாலை.

## காவலன் கண்மணிகள்

ஒளி : 6
சுடர்: 3

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### என்னகம் : 3

அன்புக்கினிய கண்மணிகாள்!

அன்புக்குழந்தை யேசுவின் ஆசிகள் என்றும் உங்களை நிரப்பட்டும்.

யார் இவர்? என்ற வினாவுக்கான விடைகள் தெரிந்தால் நல்லது. தெரியாவிட்டால் தெரிந்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் விடைகளை அன்புவிழி கோரும்போது அனுப்ப ஆயத்தமாய் இருங்கள். அங்கத்துவ எண்ணை மறந்து விடாதீர்கள். யார் இவருக்குப் பரிசுண்டு.

“ஒரு குழந்தைக் கதை இது” என்ற பாடலைப் பாடி மகிழுங்கள்.

உங்கள் ஆக்கங்களை ஆவலுடன் எதிர்பார்க்கும்
அன்பின்
அன்பு விழி.

பாடிப் பாருங்கள்

### ஒரு குழந்தைக் கதை இது...

ஒரே ஒரு ஊரிலே
ஒரே ஒரு கன்னியாம்
ஓயாமல் அவள்தன் வாழ்விலே
ஒறுத்தல்கள் செய்வாளாம்,
கன்னிமையும் தனதல்ல கடவுளுக்கே என்று
கனிந்து அர்ப்பணம் செய்தாளாம்.
ஊர் வழக்கில் அவளுக்கு
உயர்ந்த மண ஏற்பாடாம்.
எத்தனையோ ஆண்களுக்கு
அவளை மணக்க ஆசையாம்.
அவளது சுயம்வரம் தேடியே
கோல்களோடு வந்தனராம்.
தாத்தா போன்ற ஒருவரும்
தேய்ந்த தடியோடு வந்தாராம்.
நேரம் சரியாய் நெருங்கிடவே
தேய்ந்த தடியும் புதிதாகி
துளிர்த்தெழுந்து பூத்ததுவாம்.
கடவுள் சித்தம் இதுவெனவே
கன்னி கருதிக் கொண்டாளாம்.
ஒரே ஒரு நாளிலே
ஓது செப வேளையில்
ஒரே ஒரு தூதுவன்
ஒளியாய் அங்கே வந்தானாம்.
அருள் நிறைமரியே வாழ்க!
ஆண்டவர் உம்முடனே என்றானாம்.
கன்னி அதிர்ந்து நிக்கவே
ஆண்டவர் தம் அன்னையாகிட
அவளிடம் சம்மதம் கேட்டானாம்.
ஆகுமா இது எனக்கு
ஆண்மகன் வாடை அறியேனே என்றனளாம்.
ஆவியே உன்னை ஆட்கொள்வார்
அச்சம் வேண்டாம் என்றானாம்.
அம்மணி உடனே சம்மதிக்க
அவள் வயிறிறைவனின் குடிலாச்சாம்.

( அடுத்த சுடரில் தொடரும் )

பா. ஐரா காமலிற்றா
அங். எண் A 45

### யார் இவர்?

இவர் 1647 ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் பிறந்தார் இவரது தந்தை அரசரின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். சிறுவயதில் இளவரசனுடன் அரசமாளிகையில் கல்வி கற்றவர். சிறுவயது முதல் புனித பிரான்சிஸ் சவேரியார் மீது அளவற்ற அன்பு கொண்டவர். அவரைப் போலவே இந்திய மண்ணில் இறையேசுவின் நற்பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். கோவாவில் புனித சவேரியாருடைய கல்லறையில் அழியாத உடல்கண்டு ஆன்ம மீட்புக்காக அயராது உழைக்க புத்துணர்வு பெற்றார். மதுரை மறைத்தளத்திற்கு வந்து, தமிழைத் திறம்படக்கற்று, மண்ணின் மைந்தனாக மாறி, இயேசுவுக்காக பல மைல் நடந்து, பல வாதைகளைப்பெற்று நற்செய்தியைப் பரப்பினார். “ஓரியூரின் ஒளி விளக்”கென போற்றப்படும் இவர் 1693 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 இல் உடையத்தேவரின் ஆணைப்படி மணல்மேட்டில் தலை வெட்டப்பட்டு இறைவாழ்வு பெற்றார்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

# கத்தோலிக்க பொதுநிலையினர் உருவாக்கத்துக்கு முதன்மை

இந்தோனேசியாவிலுள்ள கூபாங் மறைமாவட்டத்தின் பேராயர் கிறகோறியஸ் மன்ரீரோ தமது மேய்ப்புத் திட்டத்தில் பொதுநிலையினர் உருவாக்கத்துக்கு விசேட கவனம் செலுத்தப்படும் எனக் கூறியுள்ளார்.

மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் விழிப்புணர்ச்சியும், திருச்சபையிலும் சமுதாயத்திலும் அவர்கள் வகிக்கும் பங்குமே இத்திட்டத்துக்குக் காரணமாகும் என அவர் கூறினார்.

தாம் பயிற்றியுள்ள கத்தோலிக்க தலைவர்கள் குழு மூன்று இடங்களில் மக்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறதென்றும், ஒவ்வொரு பங்கிலும் குறைந்த பட்சம் ஐந்து மறையாசிரியர்கள், குழுத் தலைவர்கள், சமுதாயத் தொண்டர்களைப் பயிற்றியெடுப்பது தான் தமது குறிக்கோள் என்றும் அவர் மேலும் கூறினார்.

16 பங்குகளைக் கொண்ட இம்மறைமாவட்டத்தில் சுமார் 80.000 கத்தோலிக்கர் வாழ்கின்றனர். இங்கு புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களே பெரும்பான்மையினர். இங்கிருந்து சில இளைஞர்கள் பயிற்சிக்காக ஜாவாவிலுள்ள பிற நகரங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். குருக்கள் இல்லாத நேரங்களில் ஞாயிறு வழிபாடுகளை நடத்தவும், அடக்கச் சடங்குகளை நடத்தவும், இசைக் குழுவை, வாசகங்களை நடத்தவும், கருத்தரங்குகள் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது.

## உல்லாசப் பயணத்துறைபற்றி திருச்சபையின் ஆய்வு

கோவை மாநிலத்திலுள்ள வாஸ்கோடகாமா என்னும் ஊரில் உல்லாசப்பயணத்துறை பற்றி திருச்சபையின் ஆதரவில் நடைபெற்ற ஓர் ஆய்வரங்கில் 34 சமூக சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

பல ஆண்டுகளாக கோவாவில் திருச்சபையும் பிற இயக்கங்களும் பெரும் அளவிலான உல்லாசப்பயணிகள் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளன. போதைப் பொருள் பாவனையும் பிற சமூகத் தீங்குகளும் அதனால் அதிகரித்தமையே அதற்குக் காரணம்.

உல்லாசப்பயணத்துறையால் வரும் இலாபத்தில் நியாயமான பங்கு மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என பங்குபற்றியோர் கருத்துத் தெரிவித்தனர். அத்துடன் விவசாயம் அலட்சியப் செய்யப்பட்டமை, பிறபொருளாதார விளைவுகள் பற்றியும் ஆராயப்பட்டது.

உல்லாசப்பயணிகள் வருகை உள்ளூர் மக்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை நேரில் கண்டறிய பங்குபற்றியவர்கள் 14 கரையோரப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

## பாகிஸ்தானில் மறைக்கல்வி மகாநாடு

இவ்வாண்டு ஐப்பசிமாதம் அனைத்து பாகிஸ்தான் மறைக் கல்வி மகாநாடொன்று நிகழவிருக்கின்றது. "21ஆம் நூற்றாண்டில் மறைக்கல்விக்கு சவால்" என்பதே இம்மகாநாட்டின் கருப்பொருளாகும்.

சென்ற நவம்பர் 13ம் திகதி பாகிஸ்தான் ஆயர் பேரவை பைசலாபாத்தில் கூடிய போது 1993இல் குருக்களின் ஆன்மீக வாழ்வை வளர்க்க இருவார புதுப்பித்தல் நெறியொன்றை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இறையியல் சார்பான புதுக்கருத்துக்களைத் தெரிவிப்பது மட்டுமல்லாது, தியானம், திருப்புகழ் மாலை, ஆயர்களுடன் உறவு ஆகியவற்றின் அடிப்படையில் குருக்களின் ஆன்மீக வாழ்வையும் இது கவனிக்கும்.

பொதுநிலையினரை உருவாக்குவதில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் கூடிய அங்கத்தவர் இடம்பெற வேண்டுமென அவர்கள் கூறினர்.

## தேர்தலின்போது குருக்கள் விழிப்பாயிருத்தல் வேண்டும்

அடுத்த மேமாதம் பிலிப்பைனில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலின்போது குருக்கள் தமக்கு எதிராக குற்றச்சாட்டு அல்லது மரணாபத்து ஏற்பட்டபோதிலும் விழிப்பாகச் செயற்படவேண்டுமென்று கருதினால் ஹைமி சின் கூறியுள்ளார்.

யேசுசபையினரால் நடத்தப்படும் சான் ஜோசே குருமடத்தின் பழைய மாணவர் ஒன்றுகூடலின்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பங்குச் சபைகள் விழிப்பாயிருந்தபோதிலும் குருவானவருடைய உந்துதலின்றி அவை செயற்படமாட்டா. திருச்சபை உலகிலேதான் வாழ்கிறது; வானிலே அல்ல. குருவும் அப்படித்தான் பிலிப்பீனிய மக்கள் தமது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடையாளமாக சுதந்திரம், சனநாயகம் நீதி ஆகியவற்றின் மீதுள்ள பற்றை மீண்டும் மீண்டும் காட்டியுள்ளனர்.

குருக்கள் பங்குபெறாமல் பிலிப்பைனில் தேர்தல் நடப்பது சாத்தியமல்ல பொது நன்மைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் தமது வாக்குகளை அளிக்க குருக்கள் மக்களுக்கு வழிகாட்டவேண்டும் பொய்ப் பிரசாரங்களையும், வாக்குறுதிகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் குரு கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது.

வரப்போகின்ற தேர்தல் வன்முறைகள் நிறைந்ததாக இருக்கலாம் குருக்கள் தம்முள்ளும் பொதுநிலையினருடனும் ஒன்றித்துநின்று சவால்களை எதிர்கொள்ளவேண்டும்.

அடுத்த ஜனாதிபதி தெய்வபயமும், திறமையும் நேர்மையும் உடையவராகவும், பொது நன்மையை நாடுபவராகவும், ஏழைகளுக்கு உதவுபவராகவும் இருக்கவேண்டும் என்று கருதினால் மேலும் கூறினார்.

## புனித செபஸ்தியார் விழா

கோண்டாவில் புனித செபஸ்தியார் கோவில் வருடாந்த உற்சவம் தை மாதம் 20ஆம் திகதி மாலை இனிதே கொண்டாடப்பட்டது.

திருநாட்பூசையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகள் நிறைவேற்றினார்.

பங்குக்குரு அருட்திரு சகாயதாசன் அடிகள் திருஉரையாற்றினார். மூன்று சிறுவர்களுக்கு முதல்நன்மையும், ஒருவருக்கு ஞானஸ்தானமும் அன்று கொடுக்கப்பட்டன. சுருப ஆசீருடன் விழா முடிவுற்றது.

யோ. அருள் ஆனந்தம்.

## இந்தியாவில் கல்வி வர்த்தகரீதியாக மாறுகிறது

இந்தியாவில் கல்வி வர்த்தகமயமாகிக்கொண்டு வருவது பற்றி சென்னை - மைலாப்பூர் பேராயர் கஷ்மீர் ஞானாதிக்கம் கவலை தெரிவித்தார். சென்னையில் நடந்த ஆசிரியர் மகாநாடு ஒன்றினை ஆரம்பித்துவைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"கிறிஸ்தவ பாடசாலைகளில் நீதி, பகிர்தல், கரிசனை உள்ள ஒரு சூழல் உருவாக்கப்பட்டால்தான் நற்செய்தி மதிப்பீடுகளை நன்குணர முடியும். குழந்தைப் பருவத்தில் பெற்ற ஞானஸ்நானத்தில் முதிர்ச்சி பெற வைப்பதே கத்தோலிக்க பாடசாலையின் இலக்கு." என்று கூறிய அவர் பிள்ளைகள் நாட்டின் பண்பாட்டில் வளர பாடசாலைகள் துணைபுரிய வேண்டும் என்றார்.

சிறப்புரை ஆற்றிய பிதா மனுவல் அல்பொன்ஸ் ஆசிரியர்கள் - நிறுவனங்களின் கொத்தடிமைகளாகவோ, அறிவியல் தொழிலாளராகவோ இராமல், நாட்டின் அன்றாட பிரச்சினைகளுக்கேற்ற வண்ணம் செயலாற்றி சமுதாயத்தில் நம்பிக்கையின் அடையாளமாக விளங்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

## மங்களூர் கிறிஸ்தவர் கொண்டாடும் பிறந்தநாள் அறுவடை விழா

கர்நாடக மாநிலத்திலுள்ள மங்களூரிலுள்ள கத்தோலிக்க மக்கள் மரியாளின் பிறந்த நாளை ஓர் அறுவடை விழாவாகவும், குடும்ப விழாவாகவும் கொண்டாடி வருகின்றனர்.

விழாவுக்கு எட்டு நாட்கள் முன்னரே ஆலயங்கள் விசேட அலங்காரத்துடன் விளங்கும். கிராமத் தலைவர் ஒவ்வொரு குடும்பத்திலிருந்து புதிய அரிசியைச் சேர்த்து, திருநாளன்று ஆலயத்தில் ஆசீர்வதித்தபின் திருப்பிக்கொடுக்கப்படுகிறது. இந்த அரிசி தேங்காய்ப்பாலுடன் கலக்கப்பட்டு குடும்பத்தினரால் பயபக்தியோடு அருந்தப்படுகிறது அன்று பல காய்கறிகளுடன் சைவ உணவு தயாரிக்கப்பட்டு குடும்ப அங்கத்தவர் அனைவரும் ஒன்றுகூடி அதிற் பங்குகொள்வர்.

ஆலயத்துக்கு வெளியே ஒரு பீடம் அமைக்கப்பட்டு குழந்தை மரியாளுக்கு விசேட செபங்களுடன் சிறுபிள்ளைகள் மலர்களை ஒப்புக்கொடுப்பதும் இங்கு மட்டுமே காணப்படும் ஒரு வழக்கமாகும்.

## கத். நிறுவனங்களுக்கு ஒரு காப்புறுதி

ஜப்பானிலுள்ள ஒரு பிரபல காப்புறுதி கம்பனியின் ஆதரவில் கத்தோலிக்க வாழ்வுச் சேவை கத்தோலிக்கருக்குப் பலதரப்பட்ட காப்புறுதி வசதிகளைச் செய்து வருகிறது.

ஜப்பானிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் 58 வீதமும், ஆண்களின் சந்நியாச மடங்களில் 48 வீதமும், பெண்களின் சந்நியாச மடங்களில் 32 வீதமும் இவ்வாறு காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. 313 பாலர் பாடசாலைகளும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் ஏனைய கல்வி நிலையங்களில் காப்புறுதி வீதம் குறைவாகவே உள்ளது.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



டெய்சி விக்ரோறியா
அன்ரனிப்பிள்ளை

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.

மலர்வு: 7-1 1921
உதிர்வு. 17-2-1987

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் 18-2-92 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால்
துயருறும் அன்புக் கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
70/2 பிறெட்றிக் ஒழுங்கை
பாண்டியந்தாழ்வு A/4/92

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம்; புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

# உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்